**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை: திரு.C..தினேஷ்குமார், M.A., B.L.,**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில்**

**Cr.M.P.No.544/2025**

**குருவிகுளம் காவல் நிலைய குற்ற எண்.55/25**

**பிரிவுகள் 331(4), 305 BNS**

**உத்தரவு நாள்: 20.05.2025**

**CNR No. TNTS09-002249-2025**

கார்த்திக் (எ) கார்த்திக்ராஜா,

த/பெ. முருகன்

... மனுதாரர்/எதிரி

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,

கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையம்

குற்ற எண்.55/2025

... எதிர்மனுதாரர்/வாதி

**மனுநாள்: 16.05.2025, மனு 480 BNSS**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு பதில் பெறப்பட்டது.

2. மனுதாரர்/எதிரி தரப்பில், மனுதாரர்/எதிரி 25.01.2025 முதல் காவலில் இருந்து வருவதாகவும், அவர் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், அவர் கூலி வேலை செய்து வருபவர் என்றும், அவர் நிரந்த முகவரி உடையவர் என்றும், அவர் நீதிமன்ற நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், எதிரியை பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் தகுந்த பிணையதாரர்களை வழங்குவதாகவும், எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது.

3. அரசு தரப்பில், இந்த வழக்கானது புலன் விசாரணையில் இருப்பதாலும், இந்த வழக்கில் குற்றப்பத்திரிக்கை தயார் நிலையில் உள்ளதாலும், மேலும், இவ்வழக்கின் எதிரியை பிணையில் விடும்பட்சத்தில், மேலும், எதிரி விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும், சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், மீண்டும் இதுபோன்ற குற்றச்செயலில் ஈடுபடக்கூடும்

என்பதாலும், மேலும், எதிரிக்கு குருவிகுளம் காவல் நிலையத்தில் 6 வழக்குகளும், கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்தல் ஒரு வழக்கும் மொத்தம் 7 வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும், மேற்படி எதிரியை ஜாமீனில் வெளியே விட கடுமையான ஆட்சேபணை தெரிவிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்/எதிரியானவர் 116 நாட்களாக காவலில் இருந்து வருவதாலும், இந்த வழக்கின் பிரதான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுவிட்டதாலும், இந்த வழக்கின் சொத்துக்களை அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டு, படிவம்-91 தயார் செய்துள்ளதை கருத்தில்கொண்டும் எதிரி வழக்கு விசாரணைக்கு ஒத்துழைப்பு தருவார் என்பதைக் கருத்தில்கொண்டும், மேலும், எதிரியை பிணையில் விடுவது எந்த விதத்திலும் அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என்பதைக் கருத்தில் கொண்டும், இந்த வழக்கின் தன்மை மற்றும் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இதன் அடிப்படையில் மனுதாரர்/எதிரி தானும், தனி இரு நபர்களும் தலா ரூ.10,000/-க்குப் பிணைப்பத்திரம் எழுதித் தருவதன் பேரிலும், மனுதாரர்/எதிரி கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் காலை 10.00 மணிக்கு ஆஜராகி 30 நாட்கள் கையெழுத்திட வேண்டுமென்ற நிபந்தனையின்பேரிலும் விடுவித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இந்த பிணை மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

C DINESHKUMAR
Digitally signed by C DINESHKUMAR
Date: 2025.05.20 18:11:01 +0530

நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.